**Dated : 28.04.2026** (நேரம் : காலை 11.50 மணி)

**MCOP. No: 33/2025**

**ம.சா. 1 திரு.காளிதாஸ்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை –**

அன்றைய தினம் நான் ஆட்டோ ஓட்டிச் சென்றேன். விபத்து நடந்த ரோடு இராமேஸ்வரத்திலிருந்து தனுஷ்கோடி செல்லும் இருவழிச்சாலை என்றால் சரிதான். அது அதிகமான போக்குவரத்து உள்ள சாலை என்றால் சரிதான். நான் ஆட்டோ ஓட்டி செல்லும்போது கைபேசியில் அழைப்பு வந்தால் எடுத்து பேசவேன் என்றால் சரியல்ல. நான் ஓட்டிச்சென்ற ஆட்டோ கணேசமூர்த்தி என்பவர் பெயரில் உள்ளது. எனக்கு இலகுரக வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் உள்ளது, பேட்ச் ஓட்டுநர் உரிமம் இல்லை. நான் ஓட்டிச்சென்ற ஆட்டோவிற்கு காப்பீடுச்சான்று இருந்தது. அந்த காப்பீடு சான்றை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு வாடகை ஆட்டோ ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அதனால் நான் சட்டப்படி விபத்து நஷ்ட ஈடு கோரமுடியாது என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டும் என்பதற்காக இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த 2ம் எதிர்மனுதாரர் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சமயம் நான் ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், செல்போன் பேசிக்கொண்டும் ஓட்டிச்சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரே வந்த வாகனத்தை கவனிக்காமல் நான் திடீரென பிரேக் போட்டதால் தான் ஆட்டோ கவிழ்ந்து அதில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் பொறுப்புல்ல என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.04.28 17:20:57 +0530

என்றால் சரிதான். 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் எனக்கு விபத்து நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. நான் மிகைப்படுத்தி இழப்பீட்டு தொகை கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் ஓட்டிச்சென்ற ஆட்டோவின் உரிமையாளர் கணேசமூர்த்தி இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினர் என்றால் சரியல்ல. அந்த ஆட்டோவின் தகுதிச்சான்று, அனுமதிச்சான்று தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயம் நான் ஓட்டிச்சென்ற பகுதிக்கு அந்த ஆட்டோவை ஓட்டி செல்ல அனுமதி இல்லை என்றால் சரியல்ல. நான் மோட்டார் வாகன சட்ட விதிமுறைகளை மீறி செயல்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிரே இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த 2ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், 2ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் நான் ஓட்டிச்சென்ற ஆட்டோவின் மீது மோதவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் ஓட்டிச்சென்ற ஆட்டோவிற்கு தகுதிச்சான்று மற்றும் அனுமதிச்சான்று இல்லாததால் பின் யோசனை செய்து 2ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக பொய்யான புகார் கொடுத்து இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.2, ம.சா.ஆ.8, ம.சா.ஆ.9 ஆகிய ஆவணங்கள் உரிய மருத்துவரை விசாரணை செய்ததால் தான் அவற்றின் உண்மை தன்மை தெரிய வரும் என்றால் சரியல்ல. அதிகமான இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக மருத்துவ பில்களை மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயம் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், எனவே 1ம் எதிர்மனுதாரர் பாலிசி விதிகளை மீறியுள்ளதால் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எனக்கு இழப்பீடு

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.04.28 17:21:03 +0530

கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. பல்வேறு இனங்களில் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.04.28 17:21:10 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.